# JAFFNA SCIENCE ASSOCIATION

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

# JSA NEWSLETTER

செய்தி இதழ்

*A QUARTERLY BULLETIN*

**VOLUME : 10** **NUMBER : 02**

**March: 2003**


## Editorial

### Deteriorating standard of education in the District

A problem that is in the minds of all of us is whether the standard of education is deteriorating in our District. For want of a better measuring stick we all measure the standard of education by examination results. The results of the year 5 recent scholarship examinations, G.C.E. O/L examinations and G.C.E. A/L examinations indicate a downward trend in the standard of education in the District. At one time, the students in the North dominated in numbers the Engineering Faculty so as to force the Government of the day to bring in standardization. Now the situation is just the reverse. If not for standardization the numbers entering the universities from this District will be much less.

There is no one reason for this state of affairs. The maladies afflicting the society, which in turn affect the students, are many. These maladies cannot be eradicated overnight. So they are going to be with us, some for sometime and rest forever. So what's the remedy?

Let us face the stark facts. Free education, at least quality education, has become a farce. Tutories have come to stay. So at the moment there are two parallel systems, of education one formal and the other non-formal, in our midst. So as a solution, why don't we recognize the tutory system and make one complementary to the other!

When we speak of education we are apt to think that it is something connected to examination since we used to measure education through examination results. But it is high time we think of education as linked to employment. In that case if one is to be employable we should stress the need for competency in English and Information Technology.

**JSA Theme for the Year 2002/2003**
**SCIENCE FOR PEACE**

## Message from the General Secretary

I have great pleasure in giving a message to the second bulletin of this year's Newsletter of Jaffna Science Association.

The JSA is functioning for the past ten years with lot of shortcoming. The JSA's main aim is dissemination and application of science knowledge to the people of this region. Our programs are conducted in this direction. School Science Programme is conducted annually to boost the knowledge of science among school students. This year too we have the School Science Pragramme and so far we have successfully completed the exhibition, essay and oratorical contests. The quiz contest is in progress.

We are going to have the Annual Sessions in April. Theme seminar, Popular, Review Lectures, Research Paper Presentations and Presidential address will be the main events in the Annual Session. The Theme of the year is "Science for Peace".

We are functioning with limited resources and we need help from all. Please give us a hand to improve our activities by becoming a life member of JSA. Also we are functioning without a permanent building for JSA and we are looking for a fairly spacious house in the vicinity of the University of Jaffna.

We are trying to register the JSA as a charity organization by an act of parliament. In this regard Mr.G.G. Gajendrakumar M.P. is taking the necessary steps and we are very thankful to him.

I take this opportunity to congratulate the editor for the release of the second Newsletter.

Dr.A. Senthuran,
General Secretary, JSA.

# SECTIONAL NEWS

## Section A

**Accomplished Activities**

1. Swami Athmapiriyanantha, Ramakrishna Mission; Kolkatha, India delivered a popular talk on the title **"Time and Timelessness".**

2. Weekly articles on various pure science subject areas were published in Sangunatham, the weekly magazine of local Tamil daily newspaper Valampuri. Section 'A' has a special column called "Vihgnanath Thulligal" in Sangunatham. So far more than 30 articles have been published. A weekly quiz contest also accompanies these articles. Every week three lucky winners are selected and awarded with cash, one hundred rupees each, prizes. Various private organizations have sponsored this quiz contest.

## Section B

**Accomplished Activities**

**Popular Talks**

1. Popular talk on **"An outlook of plant breeding"** was delivered by Mr.S.J.Arasakesary, research officer Thirunelvely research station on 12th November 2002. In his talk, he discussed the methods of plant breeding programme and importance of conservation of germplasm of selected varieties specially in Northern region.

2. Mr.P.Alvapillai Senior Lecturer, department of Agricultural Engineering delivered a popular talk on **"Thermal powder spray welding for Agricultural machinery. FUTEC-A fifth generation Technology"** on 10th December 2002. In his talk, he emphasized on the need of thermal powder spray welding specially to Jaffna peninsula.

3. Dr.A.S.Kantharajah, Senior Lecturer, University of Western Sydney delivered a popular talk on **"Invitro studies to improve plants"** on 03.01.2003 in his lecture he explained the different tissue culture techniques well.

# Section C

## Accomplished Activities

**Talks and Seminars**
The talks were held on the following topics.

1. "Reproductive health" at Victoria College Chulipuram by Dr.(Mrs)G.Bavani

2. "Hospital at Home" at Clinical Lecture Hall General Hospital, Jaffna by Dr.V.Nerminathan

3. "Good hygienic habits among school children" at Vembady Girls' High School by Dr (Mrs).G.Bavani

4. "மாரடைப்பு நோய் ஏற்படலைச் சமூக மட்டத்தில் தவிர்த்தல்"
By Dr.C.S. Jamunanantha

5. Geetha: The way of life
Mr.K. Mylwaganam

6. Prof. John Holto of University College of London will deliver a talk on "Inflamatory Bowel Diseases" in the second week of March 2003.

**School Programmes 2002-2003**

One full day workshop for A/L students of Kokuvil Hindu College was conducted on November 12th, 2002 to enlighten them in the field of Agricultural biology. The following subjects were taught with practical.

1. Important aspects of pests.
By Mr.K.Thirukumaran (Lecturer, Dept.of Agriculatural Biology)

2. Identification of order and damage of important pest.
By Mr.P.Jeyaseelan (Lecturer, Dept. of Agricultural Biology)

3. Introduction to microbiology and instruments used in microbiology
By Miss.N.Tharshinideve
(Demonstrator, Dept. of Agricultural Biology)

4. Important pest in coconut and rice.
By Mr.K.Thirukumaran
(Lecturer, Dept. of Agricultural Biology)

5. Practical explanation in different methods of pest control.
By MissT.Sriveny
(Temporary Lecturer, Dept. of Agricultural Biology)

6. Weeds and their control measures.
By Mr.A.Suthaparan
(Lecturer, Dept. of Agronomy)

7. Technology used in tissue culture
By Mr.P.Sevvel
(Temporary Lecturer, Dept. of Agricultural Biology)

8. Problems faced in cultivation of crops.
By Prof. V. Arulnandhi

# Section D

**Accomplished Activities**

The talks were held on the following topics.

1. Prof.P. Balasundrampillai, delivered a lecture "Problems of disputed enclaves and islands in Meditaranian area Geo political analysis" on 21.08.2002, which was held in the Geography Hall, University of Jaffna.

2. Mr.T.Arunakirinathan delivered a lecture "Learning Disorders" on 23.12.2002, which was also held in the Geography Hall, University of Jaffna.

3. Prof. P. Balasundarampillai delivered a lecture "Ethnic composition and distribution pattern in the North Eastern province" on 13.02.2003, which was also held in the Geography Hall, University of Jaffna.

4. Mr.B.K. Jegathesa delivered a lecture "Self Empowerment" on 19.02.2003 which was also held in the Geography Hall, University of Jaffna.

## School Science Programme 2002-2003

The Jaffna Science Association had conducted the school science exhibition contest from 11th to 13th September 2002 at the Vembadi Girls' High School Jaffna. Twenty-four schools participated and thirty nine exhibits had been exhibited during the exhibition contest. Dept. of Zoology, Dept. of Physics, Dept. of Chemistry and Dept. of Botany in the Faculty of Science, Dept. of History in the Faculty of Arts and Medical Faculty, University of Jaffna also contributed in that exhibition by exhibiting some useful and valuable exhibits. Further to this, IIS institution, Jaffna also had six show rooms to exhibit the development and skill of the advance technology through their computers. Apart from the Jaffna District students, Vavuniya, Kilinochchi and Mullaithivu school students and teachers also witnessed the exhibition. All these made the exhibition programme a great success.

The following schools were selected as prize winners at the exhibition contest.

1st J/Hindu College
*An industrial zone at Elephant Pass*

2nd J/Vembadi Girls' High School
*Conservation of Resources*

3rd J/Kokuvil Hindu College
*Automatic control of the water level in a tank*

4th J/Yarlton College
*Global environmental problems and the solutions*

5th J/Kokuvil Hindu College
*A scheme to drain off salt water in the Jaffna peninsula*

6th J/Chundikuli Girls' School
*Natural warming of air*

7th J/St.Patrick's College
*Spiro meter*

8th J/Kokuvil Hindu College
*Alarm system*

9th J/Jaffna Central College
*Jaffna town on the verge of perishing*

10th J/Jaffna Central College
*Glass House*

### School Science Oratorical Contest

The Oratorical Contest was held on 9th November 2002 at Vaitheeswara College, Jaffna. The following students are the winners of the Oratorical Contest.

**First Place** – Miss.Thanujah Thabendran
Nelliyady M.M.V, Karaveddy

**Second Place** – Miss Shaliny Sinnathamby
Chundikuli Girls' College,Jaffna.

**Third Place** – Mas.Sellathurai Prasath
Jaffna Hindu College, Jaffna

### Merit Places

Miss Ajanthaginy Satkunaratnam
Vembady Girls' High School

Miss.Jeyatharshiny Pathmasothinathan
Yalton College. Karainagar

The winners of the first, second and third places get cash prize of One thousand, Seven hundred and fifty and five hundred rupees respectively. Other seven winners get merit certificates.

### School Science Quiz Contest

Twenty-eight schools participated in the Quiz Contest of J.S.A's School Science Programme.-2002 - 2003. The following students are the winners of the Individual Performances in the Quiz Contest.

**1st Place –**
Mas. Vimaltharmaiyah Gnanaruban
St. John's College, Jaffna

**2nd Place**
Mas. Ledchumanasarma Kethara sarma
Jaffna Hindu College, Jaffna.
And
Mas. Vivekananthan Kokulan
Jaffna Hindu College, Jaffna.

**4th Place**
Mas. Nallivarothayan Hajananth
St. John's College, Jaffna.

**5th Place**
Mas. Bastiampillai Sujeevan.
St. Henry's College, Ilavalai
And
Mas. Gobalasingam Nirutheegan
St. John's College, Jaffna

**7th Place**
Miss Mathuratha Sivasubramaniam
Vembadi Girls' High School
And
Mas. Velautham Saravanan
Jaffna Hindu College, Jaffna.

**9th Place**
Mas. Punniyalingam Kuruparan
St. Henry's College, Ilavalai

**10th Place**
Mas.Kanagaradnam Thiruvarangan
Yogapuram Maha Vidyalayam, Yogapuram, Mullaitivu

The winners of the first, second and third places get cash prize of One thousand, Seven hundred and fifty and five hundred rupees respectively. Other seven winners get merit certificates.

The following eight schools were selected for the second phase of Quiz Contest which will be held at Jaffna Central College, Jaffna on 19th March 2003. The first phase of the quiz contest held at Vaitheeswara College, Jaffna. and Killinochchi Hindu College, Killinochchi.

St. John's College, Jaffna.
Vembadi Girls' High School, Jaffna.
Nelliady Mathiya .Maha.Vidyalayam. Karaveddy
Jaffna Hindu College, Jaffna.
Killinochchi Hindu College, Killinochchi.
Vigneswara College, Karaveddy
St. Henry's College, Ilavalai, Jaffna.
Murugananda Maha Vidyalayam, Murasumoddai

**School Science Essay Competition**
Sixty students participated in the Essay Competition of J.S.A's School Science Programme.-2002-2003. The details of the winners of the Essay Competition are as follows.

**1st Place**
Miss.K.Kalayarasi
Skandavarodaya College, Chunnakam

**2nd Place**
Mas.A.Andrew Nishanthan
Jaffna Hindu College, Jaffna

**3rd Place**
Miss.N.Arudchelvi
Nelliyady M.M.Vidyalaya, Karaveddy

**4th Place**
Mas.Y. Muralitharan
Killinochchi Hindu College, Killinochchi

**5th Place**
Miss.Kajenthini Thanekasalam
Manippay Ladies' College.Manippay
And
Mas.S.Thumishan
Jaffna Hindu College, Jaffna

**7th Place**
Miss.R. Shobarna
Manippay Ladies' College. Manippay

**8th Place**
Miss.S. Sangeetha
Manippay Ladies' College.Manippay

**9th Place**
Miss.Sivatharani Kathiravannasamy
Methodist Girls'High School, Point Pedro

**10th Place**
Miss.S.Kalaipriya
Murugananda M.V.,Murasumoddai

The winners of the first, second and third places get cash prizes of One thousand, Seven hundred and fifty and five hundred rupees respectively along with certificates. Other seven winners get merit certificates.

Prof.N.Gnanakumaran..
Secretary, School Science Programme, J.S.A

## List of New Members – 2002

**Section – A**

**Life Members**
Mr.R. Balasubramaniam
Mr.K.Velautham
Mr.S.V. Mahendran
Mr.S.S. Suhendran
Mr.N. Kanthavanachelvam
Mr.M.Ramkumar
Mrs.M.Padmini
Mr.G. Rajendrakumar

**Ordinary Members**
Ms.S. Jamuna
Ms.L. Saseereka
Ms.S. Ganga
Ms.V. Subashini
Mrs. A. Baring Brightly
Mrs.S. Aravinthy

**Section – B**

**Life Member**
Mr. K. Sooriyakumar

**Ordinary Member**
Dr.J.Sithambaranathan
Mr.S. Sanjayan
Miss.P. Sumithira
Miss.T. Shiamala
Mr.S. Naguleswaran
Miss.S. Thurairetnam
Mr.K. Aingaran
Mr.V. Jeyachchandran

**Section-C**

**Life Member**
Mr.R.Kapilan

**Section-D**

**Life Members**

Mrs.K. Ramanathan
Mr.T. Arunakirinathan
Mr.M. Velauthapillai
Mr.S. Sivakumaran
Mr.A. Anandarajah
Mr.N. Vijayasundaram
Ms.C. Rathie
Mr.P. Kamalanathan

**JSA – Needs your support**

Please become a life/ ordinary/ Institutional member or renew your membership.

Applications for membership should be made on Association's application form, which could be obtained from the General Secretary, JSA, C/o University of Jaffna, Jaffna, Sri Lanka.

**The article which won the First place in the Essay Competition conducted by the J.S.A for 2002-2003.**

### உலகளாவிய ரீதியில் சிறுவர் துஷ்பிரயோகம்

செல்வி க. கலையரசி
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
சுன்னாகம்.

"குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்று குறட்பாவிலே குழந்தைகளின் மகத்துவத்தை அழகாக விளம்புகிறார் வள்ளுவப் பெரு மகனார். வாழ்வாங்கு வாழுமிந்த வைய கத்திலே ஒவ்வொரு ஜீவராசியும் நல்வாழ்வு வாழவேண்டும் எனும் நோக்கிலேயே அவதரிக் கின்றன. அந்தவகையிலேயே கிடைத்தற்கரிய மனிதப் பிறவியை எடுத்து மழலைச் செல்வங்களாய் சிறார்களாய் மண்ணில் அவதரிக்கின்றான் மனிதன். மனிதன் என்றால் மனிதம் நிறைந்தவன் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மனிதனாகப் பிறப்பதற்கு ஆசை கொண்டு மண்ணிலே ஜனனிக்கும் நாள் தொட்டு வாழ்நாள் முடியும் வரை அவன் சந்தோஷமாக சுதந்திர பூமியில் வாழ்கின்றானா? இல்லை. அந்த வகையில் பிறந்தது தொட்டு இறக்கும் வரை அவன் அனுபவிக்கும் இன்னல்களில் முதற்படியே சிறுவனாய், சிறுமியாய் இருக்கும் போது அவன் அனுபவிக்கும் துயரங்களும் கொடுமை

களும். இதனையே "சிறுவர் துஷ் பிரயோகம்" என அழைக்கின்றார்கள்.

சிறுவர்கள் எனப்படுபவர் யார்? அவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதன் காரணங்கள் எவை? என ஆராயுமிடத்து வளர்ந்துவரும் மக்கள் சமூகத்திடையே மாக்களாக வாழ்பவர்களின் அராஜகக் குணங்கள் வெளி உலகிற்கு அம்பலமாகும். "சிறுவர்கள் என்றால் யார்? எனின் பள்ளி செல்லும் பருவத்தினர். அதாவது ஐந்து வய்து முதல் பதினெட்டு வயது வரையான பிள்ளைகளே சிறுவர் எனும் பதத்துள் சேர்க்கப்பட்டுள்ளனர்" என்று யுனெஸ்கோ நிறுவனம் வரைவிலக் கணப்படுத்தியிருக்கிறது. அந்த வகையில் பாடசாலையில் கல்விகற்கும் வயது நிரம்பிய பருவப் பிள்ளைகள் மீது துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படுவது ஏன்? அவ்வாறு துஷ்பிரயோகம் மேற்கொள்வது எவ்வாறு சாத்தியமாகிறது? என்பதை எடுத்து நோக்கின் இன்று உலகளாவிய ரீதியில் காணப்படும் நாடுகளிடையான, உள்நாட்டு யுத்தங்களே இதற்கு ஆதரவளிக்கும், சந்தர்ப்பம் அளிக்கும் மிகப் பிரதானமான காரணியாய், ஆணிவேராய் விளங்குகின்றது எனலாம். அது மட்டுமன்றி வளர்ந்து வரும் விஞ்ஞான உலகம், சனத்தொகைப் பெருக்கம், உலகளாவிய ரீதியில் பெருகிவரும் சமூகப் பிரச்சினைகளும் சிறுவர் துஷ்பிரயோகத்தில் பங்கேற்று நிற்கின்றன.

யுத்தத்தை எடுப்போம். இன்று உலக வரைபடத்தை உற்று நோக்கினால் "யுத்தம் இல்லாத பூமி?" "யுத்தம் இல்லாத நாடு" என்று ஒன்றை நாம் பொதுவாக இனங்காண முடியாது. வலயங்களிலே தெற்காசியா என்றாலென்ன? தென்கிழக்காசியா என்றா லென்ன? மத்திய கிழக்கு என்றாலென்ன? ஐரோப்பியா என்றாலென்ன? மேற்குலக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் என்றாலென்ன? அத்தனை நாடுகளிலும் ஏதோ ஒரு காரணியால் யுத்த ஒலி கேட்ட வண்ணமே இருக்கிறது. உதாரணமாக ஒரு நாட்டிலே இரு தொகுதிகளுக் கிடையில் உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது என வைத்துக் கொள்வோம். தாயின் கருவிலே பிறக்கத் துடித்துக் கொண்டிருந்த சிசு பல சிரமங்களை அனுபவித்து வெளியுலகைப் பார்க்க வருகிறது. ஏனெனில் யுத்தம் நடை பெறும் பிரதேசங்களில் பொதுவாக மருத்துவத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது கடினம். அதன் பின் தாயின் குரலைக்கூடப் பிரித்தறிந்து உணர முடியாத சிசு யுத்த அனர்த்தங்களில் பட்டினியால் வாடும் தன் தாயின் முலையிலிருந்து தாய்ப்பாலைக்கூடப் போதிய அளவில் பெற்றுக் கொள்ள முடியாது தவிக்கிறது. இன்னொரு புறம் வெடிச் சத்தங்கள் உடல், உள, ரீதியான பாதிப்புக் களையும், அழுத்தங்களையும் அதன் பிஞ்சு மூளையில் பதிக்கின்றன. அதுமட்டுமா? வளர்ந்து வரும் குழந்தை தன் பெற்றோர் செல்லுமிடமெல்லாம் தன் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு அலைகிறது. எத்தனை எத்தனையோ இடப்பெயர்வுகளைச் சந்திக் கிறது. அலைகின்ற வாழ்க்கையில், தனக்கு அத்தியாவசிய தேவைகளாய் இருக்கும் உணவு, உடை, உறையுள் எல்லாமே மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அது தன் அறிவிற்காகக் கல்வியைப் பெற வழி கிடைக்குமா? நிச்சயமாகக் கிடைக்காது. இவ்வாறு தன் அடிப்படை உரிமையை இழந்து நிற்பது மட்டும் தான் சிறார்கள் யுத்த காலத்தில் அனுபவிக்கும் துன்பமா? இல்லை. மேலும் எடுத்து நோக்கின்..

யத்த காலத்தில் 18 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் வலுக்கட்டாயமாகப் பலவந்தப் படுத்தப்பட்டு போர்ப்பயிற்சி அளிக்கப் படுகின்றார்கள். பாராளவேண்டுமென்று போராடித் தலைசாய்க்கும் மானிடர் மத்தியிலே பச்சிளம் பாலகர்கள் ஏதுமறியா அப்பாவி களாய் கையிலே ஏடு ஏந்தும்வயதினில் கரங்களில் துப்பாக்கி இன்னும் கனரக ஆயுதங்களை ஏந்தி மடிகின்ற வரலாறு உலகளாவிய ரீதியில் அரங்கேற்றிவரும் நிகழ்வுகளே. எங்கள் தேசத்தில் கூட பதுங்குகுழியில் எதிரியின் வரவு நோக்கிப் பார்த்திருந்து கையில் கொப்பிகளை குப்பி விளக்கொளியில் படிக்கவென வைத்திருந்த மாணவர் சமுதாயம் இருக்கின்றதெனில் யுத்தம் எந்தளவில் ஒரு சிறுவனை அல்லது சிறுமியைப் பாதிக்கின்றது என நாம் உணரலாம்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்று நோக்குமிடத்து ஒரு சிறுவனிற்கோ அல்லது சிறுமிக்கோ பாலியல் ரீதியாக ஏற்படும் பாதிப்புகளே சிறுவர் துஷ்பிரயோகம் என்று பொதுவாக நம்மில் பலர் கருதுகின்றனர். உண்மை யிலேயே சிறவர் துஷ்பிரயோகம் என்பது அதுவல்ல. ஒரு சிறுவன் அல்லது சிறுமி தன் அடிப்படை உரிமைகளில் ஒன்றையேனும் இழப்பின் அல்லது அவள் அல்லது அவன் பிறரால் தன் மனதளவேனும் துன்ப முற்றிருப்பில் ஜனநாக நாட்டில் ஒரு பிரஜை என்ற ரீதியில் கல்வி விளையாட்டு போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்ற முடியாது இருப்பின், அவன் அல்லது அவள் பிறரால் களவெடுத்தல், போதைப்பொருள் பாவித்தல் போன்ற தீய பழக்க வழக்கங்களில் இட்டுச் செல்லப்படின் இவையெல்லாம் சிறுவர் துஷ்பிரயோகங்களே என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் UNESCO சிறுவர்களிற்கான அமையம் கூறி நிற்கிறது.

இன்று யுத்தகாலமன்றி மற்றைய காலங்களில் படைமுகாம்களில் வாழும் சிறார்கள் பெரியவர்களால் பாலியல் இம்சைகளிற்கு ஆளாகின்றனர் என்பதனை நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம். அது மட்டுமல்ல இன்று சமூகத்திலே பல்வேறு மனத்

துாண்டல்களிற்கு ஆளாகும் பெரியவர்கள் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் கருவிகாளாக சிறுவர்களை உபயோகிக்கின்றனர்.

உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் கிறிஸ்தவப் பாதிரிமார் மீது சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளதை நாமறிவோம். அது மட்டுமல்ல பன்னாட்டுப் போர் முனைகளிலும் இன்று சிறுவர் பங்குகொண்டு நிற்கின்றனர். யுத்த அனர்த்தத் தினால் ஏற்படும் உயிரிழப்புக்களில் பெரும்பாலானவை சிறுவர்களின் உயிரிழப்பே.

ஆபிரிக்க நாடுகளில் பொதுவாக வறிய நாடுகளாகக் கருதப்படுபவை கென்யா, நைஜீரியா போன்றன. இந்நாடுகளில் ஏற்பட்டிருக்கும் வறுமையினால் இன்று அங்கு அதிகளவில் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் சிறார்களே. அதுமட்டுமல்லாது சிறுவர்கள் பலர் கீழைத்தேச நாடுகளிலிருந்து மேற்கு நாடுகளிற்கு உழைப்பின் பொருட்டு களவாக சில நிறுவனங்களால், நபர்களால் கொண்டு செல்லப்படுகின்றனர். அங்கு அவர்கள் போதைப் பொருள்கள் கடத்தல், பாரிய கொள்ளைகளில் ஈடுபடல் போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக இன்று எத்தனையோ ஏழை நாடுகளில் சிறுவர்களைக் கொன்று சிறுநீரகம் போன்ற அங்கங்களை எடுத்து ஏற்றுமதி செய்யும் கொடூரமான நிகழ்வுகளும், சிறார்களை அநியாயத்தின் பேரில் மூடநம்பிக்கை காரணமாகப் பின்தங்கிய பிரதேசங்களில் கொன்று நரபலியிடல் போன்றனவும் அரங்கேறுகின்றன.

இந்த நிலையை மாற்றியமைக்க நாமனைவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டும். சிறுவர்களே ஒரு நாட்டின் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் துாண்கள் என்பதை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும். 1990ஆம் ஆண்டு நியூயோர்க்கில் நடைபெற்ற சிறுவர்கள் நலன் தொடர்பான மகாநாட்டின் பிரகாரம் இன்று எத்தனையோ நாடுகளில் UNESCO, UNICEF போன்ற சர்வதேச அமையங்களாலும் உள்நாட்டு அமையங் களாலும் சிறுவர் நலன்கள் காக்கப்பட்டு, அவர்களை நல்லபடி வழிகாட்டி அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க நாடுகள் முன்னிற்பதுவும் நாளைய உலகில் வெகுவிரைவில் சிறுவர் துஷ்பிரயோகம் நீக்கப்பட்டுவிடும் என்பதை உலகமெங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இன்று சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் ஒவ்வொரு நாடுகளிலும் பகிரங்கமாகத் தண்டனைக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள். யுத்த முனைகளில் சிறுவர்கள் நிறுத்தப்படுவது பெரும்பாலும் தவிர்க்கப்பட்டு வருகின்றது. தாய்சேய் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் அமையத்தின் சுகாதார ஸ்தாபனம், மற்றும் பல சுகாதார நிறுவனங்கள் பிறந்த குழந்தைகளிற்கு திரிபோசா மா வழங்குதல், உணவுப்பொருட்கள் வழங்குதல் மூலம் ஊட்டத்தைப் பெற வழிவகுத்து வருகின்றன.

பாடசாலைகளில் இலவசக்கல்வி வழங்கல் மூலம் கல்விவாய்ப்பு அளிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது பெரும்பாலான நாடுகள் எதிர்கால சமூகத்தவரின் நலனைக் கருத்தில் கொண்டு சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத் திட யுத்தத்தை விடுத்து முன்னிற்கின்றன.

“மாடிவீட்டு யன்னல் கூட சட்டை போட்டிருக்கே. இந்த ஏழைவீட்டு சின்னப் பொண்ணு அம்மணமாயிருக்கே”

என்ற நிலை சிறிது சிறிதாகமாற பலநாட்டு அரசாங்கங்களும் பொது மக்களிற்கு பல்வேறு உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுகின்றன.

இவ்வாறு செய்யப்படும் பணிகள் யாவும் துரிதகதியில் மேற்கொள்ளப்படுமாயின் சிறுவர் துஷ்பிரயோகம் எனும் கொடிய நிகழ்வு அகிலத்தை விட்டு நீங்கி ஒவ்வொரு சிறுவரும் சுகவாழ்வு பெற வழிகிடைக்கும்.

எனவே வளர்ந்துவிட்ட 21ம் நூற்றாண்டில் வாழும் அறிவுத் திறம்படைத்த மனிதர் களாகிய நாம் எம் வருங்கால சமூகத்தவரின் நலனில் அதீத அக்கறையுடன் செயற் படுவோம். “சிறுவர் துஷ்பிரயோகம்” எனும் இராட்சத செயலை அழித்து எம் மொட்டுக் களாம் சிறார்களை வளமாக நாளைய உலகில் விரியவைக்க முன்னின்று உழைப் போமாக.

சிறார்களின் பெருமை கண்டு
சிறப்புடன் வாழ வைப்போம்!!!

**The article which won the third place in the Essay Competition conducted by the J.S.A for 2001-2002.**

## இந்த தலைமுறையினது மனநிலைத் தாக்கங்களும் அவற்றிற்கான காரணிகளும்

சிங்கராசா துமிசன்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பரணம்.

சமுதாயம் என்பது ஆரோக்கியமானதாக இருத்தல் என்பது ஒரு தேருக்கு அச்சாணி எவ்வளவு முக்கியமானதோ அதைவிட அவசியமானதாக அமைகின்றது. ஒரு ஆரோக்கியமான சமுதாயம் என்பது ஒரு நல்லதொரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மிகவும் அவசியமானதாகும். சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் பங்கு வகிப்பதனால் சமுதாய ஆரோக்கியம் என்பது கருமாதிரி கருவில் உள்ள பரம்பரை அலகுகள்

மாதிரியாகும். ஆரோக்கியமான சமுதாயம் என்றால் தனியாக புறச்சுகாதாரமாய் இருப்பது மட்டுமல்ல அத்தோடு அகச் சுகாதாரமும் அதாவது மனநிலையும் காரணமாகும். மனநிலை ஆரோக்கியமாக உள்ள ஒருவனாலேயே நல்ல விதத்தில் சிந்தித்துச் செயலாற்ற முடியும். செயற்பாடு நல்ல பயனைத் தரக்கூடியதாகவும் இருக்கும். இதனாலேயே நல்லதொரு ஆரோக்கிய சமுதாயத்தை கட்டியெழுப்ப மனஆரோக்கியம் எவ்வளவு பங்கு வகிக்கின்றது என்பது தெளிவாகும். ஏனெனில் தனிநபர் பலர் சேர்ந்தே சமுதாயம் உருவாகிறது. அச்சமுதாயம் ஒன்று சேர்ந்தே கிராமம், நகரம் நாடு என்று விருத்தியாகின்றது. இதனால் தனிநபர் உளம் இதில் வகிக்கும் பங்கு தெளிவாகும்.

இன்றைய உலகிலேயும் அதிலும் இலங்கையைப் பொறுத்தவரை யுத்தம் மலிந்த பூமி அநீதியின் இராட்சியம் அரங்கேறிக் கொண்டிருக்கும் பூமி. அந்த வகையில் இலங்கையைப் பொறுத்த வரையில் அனைவரும் ஏதோ ஒரு வகையில் மனநோயாளிகளாகவே இருக்கின்றனர் என்று கூறுகின்றது ஒரு ஆய்வு. இன்று முக்கியமாக எமது இளைய சமுதாயம் மிகவும் மோசனமான ஒரு நிலைக்கு போய்க் கொண்டிருக்கின்றது. இப்படியே சென்றால் எமது வருங்கால சந்ததி அதள பாதாளத்தில் தான் சீவனம் நடத்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வளரும் பாலகர்கள்கூட மிகவும் மோசமானதொரு உளவியல் தாக்கத்திற்கு உட்படுவதுதான் மிகவும் கவலைக்குரிய நிலமையாகும். வளரும் பருவத்தில் அதாவது ஐந்து தொடக்கம் அதற்குமேற்பட்ட வயதுவரை ஒரு பிள்ளையின் அடிமனத்தில் என்ன பதிந்துள்ளதோ அதுதான் அந்த பிள்ளை இறக்கும் மட்டும் அதன் உளத்தில் தாக்கம் விளைவித்துக் கொண்டிருக்கும் என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். இந்தக் கொடிய யுத்தத்தால் அனைவரும் பாதிக்கப்படுவது ஒருபுறம் இருக்க சிறார்கள் பாதிப்படைவதே அதிகமாக உள்ளது. பெற்ற தாய் கண்முன்னே சிதறி சின்னா பின்னமாவதைக் காணும் ஒரு பாலகனின் மனநிலை எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை எண்ணிப்பார்க்கவே ஏதோ ஒரு மாதிரி இருக்கின்றது என்ன இருந்தாலும் ருவாண்டா நாட்டில் நிகழ்ந்த கோரம் நம்நாட்டில் நிகழவில்லை என்பது ஓரளவேனும் ஆறுதல் தருகின்றது. தாய் இறந்தது தெரியாமல் பால்குடிக்கும் பச்சிளம் பாலகனின் ஒரு புகைப்படம் பத்திரிகைகளில் வந்ததை நாம் அவதானித்திருக்கின்றோம். ஆனாலும் இப்படியே இவ்யுத்தம் அதிகரிக்குமானால் அந்த நிலையும் வெகுஅருகில்தான் என்பதில் ஐயமில்லை.

மேலும் இவ்யுத்தத்தால் அனாதை களாக்கப்படும் பாலகர்களின் தொகையும் கணக்கின்றி அதிகரிக்கின்றது. இதனால் மனநிலை குழம்பிய சிறார்கள் எத்தனையோ பேரை நாம் சந்தித்திருக்கின்றோம். தான் ஒரு அனாதை தனக்கு ஆதரவாக ஒருவரும் இல்லையே என்ற நினைப்பே அந்த பிள்ளைகளை தாக்குகின்றது. இதனால் உளவியல் ரீதியாக பாதிப்படையும் அவர்களால் எப்படி ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்? இதனால் அடிமனதிலிருந்து அவர்களின் வாழ்க்கையையே வேரறுத்துக் கொண்டிருக்கும் இந்த உளத்தாக்கத்தால் அவர்களால் சரியாகத் தமது கடமைகளைச் செய்யமுடியவில்லை. இதற்கு காரணமான யுத்தம் நிறுத்தப்படும் வரை இந்த பாதிப்பு அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

அத்தோடு சிறார்களை மட்டுமன்றி வளர்ந்தோரும் ஒருவித மனஉளைச்சலுடன் தான் நம்மிடையே நடைபிணங்களாக நடமாடுகின்றார்கள். வீடிழந்து மனைவி மக்களை இழந்து அவர்கள் வாய்பேசாத பைத்தியங்கள் போல் நம்மிடம் உலாவு கின்றார்கள். இப்படியாக பலரும் பலவகையில் ஒரு மனநிலை ரீதியாகக் குழம்பிய நிலையிலே காணப்படுமானால் எம் தமிழ் சமுதாயமே பாழ்நிலைக்கு அழிவைநோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றதே தவிர நாம் நினைப்பதுபோல் நாகரீக முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கவில்லை. மனதில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மனது வெறுத்து ஒருவித வக்கிரபுத்திக்கு ஆட்பட்டு மனதளவில் ஒரு காட்டுமிராண்டி வாழ்க்கையே இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தனிமையும் ஏமாற்றமும் ஒன்றுசேர்ந்து இன்றைய எமது முதியோர்கள் பைத்தியமான நிலையிலேயே இருக்கின்றார்கள் என்பதை அதிகரித்துவரும் மனநோயாளர்களின் எண்ணிக்கையும் முதியோர் காப்பகங்களும் எமக்கு பறைசாற்றுகின்றன. வெளிநாட்டு மோகத்தால் அனாதைகளாக்கப்பட்ட உளப் பாதிப்படைந்த முதியவர்கள் எம்மிடையே மிக அதிகம். கூடியிருந்து உணவருந்தி உல்லாசமாய் கும்மாளமிட்டு பாடிக்கழித்த பழைய நினைவுகளை மீட்டுப்பார்த்து மனமே சோர்ந்த நிலையில் வசிக்கின்றனர். அருகில் இருக்கும்போது அப்பா என்று பாசத்துடன் அழைத்த பிள்ளை வெளிநாடு சென்றவுடன் வருடத்திற்கொருதரம் வந்து ஒருநாள் தன்னும் தன்னுடன் பழகுவதற்குச் செலவு செய்யமுடியாததை இட்டு உளத்தாக்க மடைந்த அப்பாக்கள் பலர் நம்மிடையே இருப்பது நாமறிந்த உண்மை.

இது ஒரு வகை. இன்னோர்வகை. வெளிநாடு செல்ல ஆடுமாடு தொடக்கம் எல்லாவற்றையும் விற்றுவிட்டு கடைசியில் ஒன்றுமில்லாது நடுத்தெருவில் நாய்போலலையும் நம்மவர்

மிகவும் உச்சக்கட்டமாக பாதிப்படைந்த நிலையில் நம்மிடையே உலாவுவதும் நாமறிந்த உண்மை.

இவையெல்லாம் தவிர்த்து இனத்துவேசம் கொண்டு திட்டமிட்டு நமது இளம் தலைமுறை இன்று அழிக்கப்படுவதால் ஏற்படும் உளப்பாதிப்பக்கள் மிகவேகமாக நம்மிடையே மலிந்துவருகின்றது. ஆரம்ப காலம் தொட்டே கல்வியில் சிறந்து விளங்கிய நமது யாழ் மண் இன்று கல்வித் தரத்தில் மிகவும் வெட்கப்படக்கூடிய நிலைக்கு சென்று கொண்டிருப்பது நாமெல்லாம் வருத்தப்படக் கூடிய விடயமாகும்.

போதைவஸ்துப் பாவனை, ஆபாசப்படங்கள், பாலியல் வல்லுறவுகள், மதுப்பாவனை, புகைப்பிடித்தல், சினிமா மோகம் போன்ற் வற்றால் எமது இளம் சமுதாயம் மிகவும் உளவியல் ரீதியாகப் பாதிப்படைவது நம்மிடையே மலிந்து வருகின்றது. இன்று எமது பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரத்திலும் சினிமாப்படக் காட்சிகளினுள் புகுவதை நம்மில் அநேகர் பார்த்திருக்கலாம். மிகவும் அபாயமானதொரு நிலையில் நமது கல்விச் சமுதாயம் இன்று போய்க் கொண்டிருப்பது தடுக்கப்பட வேண்டிய ஒரு செயற்பாடாகும்.

போதைவஸ்துப் பாவனை மூலம் பைத்தியங்களாகி மனநிலை சரிசெய்வதற்காக மனநோயாளிகள் வைத்திசாலைக்கு அலையும் பலரை நாம் பார்த்திருக்கின்றோம். இது வெல்லாம் நாம் அறிந்து கொண்ட விடயம் தான் என்பது ஒருபுறமிருக்க இதை தடுக்க நமது சமுதாயத்தலைவர்கள் முன்வராததுதான் மிகவும் காவலைக்குரிய விடயம்.

மேலும் ஆபாசப்படங்களையும் சினிமாப் படங்களையும் பார்த்துவிட்டு வக்கிரபுத்தியுடன் ஒருவிதமான கொலைவெறியுடன் திரியும் பல இளம் சமுதாயத்தை நாம் பார்க்கின்றோம். சிறு வயதிலேயே பார்க்கக் கூடாதவற்றை பார்த்துவிட்டு அதனால் உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்து அதன்மூலம் கல்வி போன்றவற்றை விடுத்து தங்களில் பலவயது மூத்த பலரை பார்வையிலேயே துகிலுரியும் பல வக்கிரமான மனத்தாக்கமடைந்த மாணவ சமுதாயமே இன்று யாழ்ப்பாணத்தில் பெருகி வருகின்றது. இத்தோடு மதுப்பாவனை, புகைப்பிடித்தல் போன்றனவும் மாணவர்களின் படிப்பைக் குழப்பி அதன்மூலம் அவர்கள் இடையே ஒருவித மன இறுக்கத்தை ஏற்படுத்தி அதனால் வருங்கால சமுதாயத் தையே சீரழிக்கக்கூடிய இந்த செயற்பாடுகளை நாம் இன்னும் அனுமதித்தால் யாழ்ப்பாணச் சமுதாயம் தனது பாரம்பரியத்தையும் பண்பாட்டினையும் தொலைத்துவிட்டு கணவனை இழந்த விதவை போல மூளியாக நிற்பதை காண்பது வெகுதுாரத்தில் இல்லை என்பதை நாம் உணர்ந்து நடந்தால் சரி. நாம் அனைவரும் இதை சரி செய்வதைவிட்டுவிட்டு நாம் நாகரீகம் அடைந்துவிட்டோம் வளர்ச்சியின் உச்சியில் நின்றுகொண்டிருக் கின்றோம் என்று முரசு கொட்டுவதில் ஒருவித பயனுமில்லை. ஏனெனில் சரியாக அத்திவாரம் போடப்படாத கட்டிடம் எவ்வளவுதான் திறமையாகக் கட்டினாலும் அது உறுதியாக நிற்காது என்பது நாமறிந்த உண்மை. எனவே உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்த ஒவ்வொரு தனி நபரும் சமுதாயத்தை வலுவிழக்கச் செய்யும் ஒவ்வொரு காரணம் என்பதை நாம் அறிந்து செயற்பட்டால் உளவியல் ரீதியாக புத்துணர்வு பெற்ற ஒரு புரட்சிகரமான ஆரோக்கியமான சமுதாயத்தை நாட்டை கட்டியெழுப்பலாம் என்பதை நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். ஏனெனில் நல்ல நாட்டை உருவாக்கும் அடிக்கல் ஆரோக்கியமான உளரீதியாகப் புத்துணர்வு பெற்ற தனிநபர் ஆவார் என்பதாகும்.

**PRINTED MATTER**

**JSA – NEWSLETTER**

Stamp

To:
Dr. N. Sivayogan
Dept of Physics
University of Jaffna

*Chief Editor*
*Jaffna Science Association*
*C/o Department of Geography*
*University of Jaffna*
*Jaffna, Sri Lanka.*